1973 நவம்பர் 27]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : செய்ய வேண்டியது மத்திய சர்க்கார். அவர்களுக்கு அப்படி ஒன்றும் யோசனை இருப்பதாகத் தெரியவில்லை.

போந்தவாக்கம் கிராமத்தில் புதிய ஏரி அமைப்பு.

424 விஞ*—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், போந்தவாக்கம் கிராமத்தில் அமையும் ராள்ள கால்வாய் அணைத் திட்டமும், புது ஏரி அமைப்புத் திட்டமும் நிறைவேறுவதில் காலதாமதம் ஏன் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பிராந்திய அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டம் சில தொழில் நுட்பமாறுபாடுகளினுல் திருத்தி அமைக்க வேண்டியதாயிற்று. எனவே, இத்திட்டத்தை மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : இந்தத் திட்டத்தின் மதிப்பீடு என்ன ? இந்தத் திட்டம் எப்போது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 51,500. இது விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.

காட்டுப்புத்தூர் வாய்க்கால் சீரமைப்பு.

425 விஞ*—திரு. சி. க. வடிவேலு :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருச்சி மாவட்டம், தொட்டியம் தொகுதியில் உள்ள காட்டுப்புத்தூர் வாய்க்காலைப் புதுப்பித்து சீரமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?